1989 ஏப்ரல். 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 68,46,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25-4-1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

88. திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முறைப்படுத்தப்பட்ட அங்காடிக்கு சில கிராமங்களை சேர்ப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11- 3- 1988-ஆம் நாளிட்ட 384-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

89. டி. கல்லுப்பட்டி முறைப்படுத்தப்பட்ட அங்காடிக்காக பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 15—3—1988 ஆம் நாளிட்ட 423-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

90. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). தமிழ், ஆங்கிலம்].